# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No.121/2021 |
| Prosecution Witness | : | **அ.சா.**4 |
| Name | : | **ரமேஷ்** |
| Father's / Husband Name | : | ராமசாமி |
| Address | : | மேலபுலியூர் அஞ்சல், பெரம்பலூர் மாவட்டம் |
| Age | : | 49/2026 |

**<u>தேதி : 18.02.2026</u>**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.ச. மோகனபிரியா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.**<u>2, 3 எதிரிகள் ஆஜர், 1, 4 எதிரிகள் ஆஜர் இல்லை. 1, 4 எதிரிகள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது.</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.1 ஐஎனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். மற்ற எதிரிகள் நீதிமன்றத்திற்கு வரவில்லை. அவர்களை எனக்கு தெரியும். தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை. சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு எதிரிகளுக்கும், அ.சா.1க்கும் இடம் சம்மந்தமான பிரச்சனை தொடர்பாக ஒருவரையொருவர் தாக்கி கொண்டார்கள். நாங்கள் சென்று விலக்கிவிட்டோம். வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் தெரியாது. போலீஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

**சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வைத்த கோரிக்கையை ஏற்று சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து அரசு தரப்பு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 18.04.2021ம் தேதி காலை சுமார் 8 மணி அளவில் JCB வாகனம் ஓட்டுவது தொடர்பாக ஏற்கெனவே அ.சா.1க்கும், இவ்வழக்கின் எதிரிகளுக்கும் இடையே இருந்த நில பிரச்சனை காரணமாக ஆஜர் எதிரிகள் அ.சா.1, அ.சா.2, அ.சா.3 ஆகியோர்களை தகாத வார்த்தைகளால் திட்டி உருட்டுகட்டையால் அடித்து காயம் ஏற்படுத்தி அறுவாலைகாட்டி கொலைமிரட்டல் விடுத்ததாக போலீஸார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் அனைவரும் உறவினர் என்பதால் அவர்களை காப்பாற்றுவதற்காக வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.